என்ன செய்து கொண்டிருக்கிறது ரீல்ஸ் அரசின் சினிமாத்தன அதிரடிப்படை?

சாத்தான்குளம் பெண் வெட்டிக் கொலை தொடர்பாக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. பதிவு!



சென்னை, அக். 25-

சாத்தான்குளத்தில் வீடு புகுந்து ஒரு பெண் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தொடர்பாக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள், தமது சமூக வலைதளப்பக்கத்தில், என்ன செய்துக் கொண்டிருக்கிறது ரீல்ஸ் அரசின் சினிமாத்தன அதிரடிப்படை என்று பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவு வருமாறு:

சாத்தான்குளம் அருகே வீடு புகுந்து மேரி விஜீலா என்கிறப் பெண் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டு, அவரின் இரண்டு பெண் குழந்தைகளும் கடத்தப் பட்டுள்ளனர். அவரின் கணவரும் மகனும் படுகாயமடைந்துள்ளனர்.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வீட்டிலும் பாதுகாப்பில்லை, பொது வெளியிலும் பாதுகாப்பில்லை எனும் அளவிற்கு ஓர் அசாதாரணச் சூழலுக்குள் தமிழ்நாட்டைத் தள்ளியிருக்கிறது பொறுப்பற்ற த.வெ.க. அரசு.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அன்றாடச் செய்தியாகிக் கொண்டிருக்கும் போது, அவற்றைத் தடுக்காமல் என்ன செய்து கொண்டிருக்கிறது ரீல்ஸ் அரசின் சினிமாத்தனமான அதிரடிப்படை?

தங்களுக்கு வாக்களித்த பெண்களின் பாதுகாப்புக்கு வேட்டு வைப்பது தான் த.வெ.க. அரசு அவர்களுக்குத் தரும் பரிசா?

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும்!

ஜனநாயகத்தைப் பாதுகாக்க தி.மு.க. துணை நிற்கும்!

தேர்தல் ஆணைய கூட்டத்தில் இருந்து வெளிநடப்பு செய்த பின் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் பேட்டி!



சென்னை, அக்.25-

எஸ்.ஐ.ஆர். தொடர்பான தேர்தல் ஆணைய கூட்டத்தில் கலந்து கொண்டு வெளிநடப்பு செய்த பின் தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் செய்தியாளர்கள் சந்திப்பில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க தி.மு.க. துணை நிற்கும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இதுகுறித்து கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தமான் அளித்த பேட்டி வருமாறு:-

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பில் முன்வைக்கப்பட வேண்டிய கருத்துக்கள், மக்களின் சார்பாக மக்களுக்கான தேவைகள் என்ன என்பதை முன்னிறுத்தி நாங்கள் எங்களுடைய கருத்துக்களை அங்கே தெரிவித்துவிட்டு வெளிநடப்பு செய்திருக்கிறோம். கூட்டத்தில் நாங்கள் முழுமையாக பங்கேற்கவில்லை. கூட்டம் தொடக்கத்திலேயே நாங்கள் எங்களுடைய கருத்துக்களை முன் வைத்து வெளியேறி இருக்கிறோம்.

அதில் மிக முக்கியமான கருத்துக்கள் என்னவென்றால், எஸ்.ஐ.ஆர். நடைமுறையில் ஏற்பட்டிருக்கக்கூடிய பல குளறுபடிகளை எப்படி சரி செய்யப் போறீங்க? எப்போது சரி செய்யப் போறீங்க.? என்பது தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரதான கேள்வி.

74 இலட்சம் வாக்காளர்கள் நீக்கம்!

கடந்த முறை திருத்தப்பட்ட எஸ்.ஐ.ஆரில் இறுதி வாக்காளர் பட்டியலில் 74 லட்சத்திற்கு மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டிருக்கிறாங்க. அந்த நீக்கப்பட்ட வர்களை மீண்டும் சேர்க்கப்படுவதற்கான என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள் என்பதை நாங்கள் கேட்டிருக்கிறோம். நீக்கப்பட்டவங்கல் லாம் என்ன, நாடு கடத்தப்பட்டுட்டாங்களா? இந்தியாவிலேயே இல்லையா? அவங்க தமிழ் நாட்டில் வசிக்கலையா? அப்ப அவங்க எங்க இருக்கிறாங்க? இந்தக் கேள்விக் கெல்லாம் தேர்தல் ஆணையம் பதில் சொல்லவே இல்லை.

இப்ப எஸ்ஜஆர் என்ற ஒரு நடைமுறையை கடைப்பிடித்தாங்க. இப்ப எஸ் எஸ்ஆர், ஸ்பெஷல் சம்மரி ரிவிஷன். இது ஆண்டுதோறும் வந்து ஜனவரி 1ஆம் தேதியை தகுதி நாளாக வைத்து ஒவ்வொரு வருடமும் நடத்தக்கூடிய ஒரு எலக்ட்ரோல் ரிவிஷன்தான். ஆனா இதை வந்து ஸ்பெஷல் சம்மரி ரிவிஷன் ஒரு பேர் போட்டு இதை இன்னைக்கு நடத்துறாங்க.

நீங்க எஸ்ஜஆர் நடத்துறீங்க, எது நடத்துனாலும் வந்து பீப்பிள் பிரண்ட்லியாக இருக்கணும். எலக்ஷன் கமிஷன் வாக்காளர்களுக்கு வந்து ரொம்ப இலகுவா இருக்கணும். வாக்காளர்கள் தங்களுடைய பெயரை பதிவு செய்துறதுக்கான ஒரு வசதியை மேற்கொள்ளணும். அந்த மாதிரி எதுவுமே இல்லை.

ஒரு பக்கம் வந்து தேர்தல் ஆணையம் வாக்காளர்கள் 100% வாக்களிக்கனும் என்று விளம்பரப்படுத்துறாங்க. அதற்கான விழிப்புணர்வை செய்றாங்க. ஆனா வாக்காளருடைய பெயரை சேர்க்கறதுக்கே பல முட்டுக்கட்டை போடும்போது, அப்ப ஜனநாயகத்தில் வாக்காளர்கள் 100% வந்து வாக்களின்னு சொல்றதுல முரண்பட்ட தன்மைதான் தேர்தல் ஆணையத்துல இருக்கு.

அது மட்டுமல்ல, இப்போது இந்திய தேர்தல் ஆணையத்தினுடைய தலைமை தேர்தல் அதிகாரியாக இருக்கக்கூடிய ஞானேஷ் குமார் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கடந்த 17ஆம் தேதி அணைக்கு திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கூட்டத்தை கூட்டி பல தீர்மானங்களை வடித்து நாங்க வெளியிட்டுருக்கிறோம்.

ஜனாதிபதியை சந்தித்து தி.மு.க. மனு!

அதில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய அந்த தீர்மானங்கள் ஒன்றுதான் வந்து ஞானேஷ் குமார் வந்து பதவி விலக வேண்டும். ஜனாதிபதியை சந்தித்து மனு கொடுக்கறதும் நாங்க தீர்மானம் நிறைவேற்றிருக்கோம்.

நாங்கள் ஏற்கனவே எடுக்கப்பட்ட தீர்மானத்தை ஒட்டிதான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இந்த சீப் எலக்ஷன் கமிஷன் ஆப் இந்தியாவை வச்சுக்கிட்டு எந்த ஒரு எக்ச்சைஸ் செய்தாலும், எந்த வாக்காளர் பட்டியல் திருத்துகிற நடவடிக்கையை மேற்கொண்டாலும், அதில் நம்பகத் தன்மை இருக்காது. அது உண்மையான வெளிப்படைத்தன்மை இருக்காது.

அதனால திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பிரதான கோரிக்கை என்னவென்றால், இந்த சீப் எலக்ஷன் கமிஷன் ஆப் இந்தியாவை வச்சு நீங்க செய்ற எந்த எக்சசைஸும், இது வந்து யூஸ்லெஸ் தான், இது வேஸ்ட், இது கண்துடைப்புதான். ஜனநாயகத்துக்கு ஏமாத்தக்கூடிய வேலைதான்.

அதனால இந்தியாவில இருக்கக்கூடிய ஒட்டுமொத்த பிரதான எதிர்க்கட்சிகள், அரசியல் கட்சிகள் எல்லாம் வந்து இன்றைக்கு இருக்கக்கூடிய தலைமை தேர்தல் அதிகாரி மேல நம்பிக்கை இழந்து பல கருத்துக்களை, குற்றச் சாட்டுகளை முன்வைத்திருக்கிறோம்.

எனவே வந்து ஒன்றிய அரசாங்கம் இதற்கு செவிசாய்த்து, இந்திய தேர்தல் ஆணையம் வந்து இதை அவர் தானாக முன்வர வேண்டும். இல்லைன்னா சட்டத்திற்கு உட்பட்டு, கான்ஸ்டிட்யூஷனலி ரிமூவ்ட், அதை வந்து ரிமூவ் பண்ணலனா நிச்சயமாக இந்த வாக்காளர் திருத்துகிற பணி என்பது நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடைபெறாது என்பதை நாங்கள் தெளிவாக எடுத்துரைத்து நாங்கள் வெளிநடப்பு செய்திருக்கோம்.

செய்தியாளர் கேள்விக்கு பதில் :

தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் அதிசயமான விஷயம் பார்த்தா, ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியுமே வெளிநடத்தி இருக்கு. இதை வந்து எப்படி பார்க்கறீங்க?

இல்ல, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிங்கறத விட வாக்காளர் பட்டியல் திருத்துகிற பணி சரியா இருக்கறதுதான் நோக்கமே தவிர, இது ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, இந்தியா கூட்டணி, அந்தக் கூட்டணி லாம் ஒண்ணுமே கிடையாது. எல்லாருக்குமே தெரியும், இந்தியாவுல முதல் முதல்ல வந்து இந்த எஸ்ஜஆர்ங்கிற ஒரு சப்ஜெக்ட் வந்து பீகார்ல நடந்து கொண்டிருக்கும் போதே இந்தியாவிற்கே வந்து அலாரம் அடிச்சவர் வந்து திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் தான்.

அன்றைக்கு முதலமைச்சராக இருந்து தமிழ்நாட்டை ஆட்சி செய்தாலும் கூட இந்த எஸ்ஜஆருக்காக எதிர்த்து நடைபெற்ற பீகார்ல இருக்கக் கூடிய ஒரு பேரணிக்கு வந்து போய் கலந்துகிட்ட ஒரு மாநில தலைவர் இந்தியாவுல எங்களுடைய தலைவர் தான்.

தமிழ்நாட்டில எந்த அரசியல் கட்சி தலைவரும் அந்த மாதிரி அங்க போய் பங்கு கொள்ளல. ஆனா நாங்கதான் முதல் முதல்ல, எங்க தலைவர்தான் வந்து எஸ்ஜஆர்ல இருக்கக்கூடிய குளறுபடிகள், அதனுடைய விளைவுகளைப் பற்றி முதல் முதல்ல வந்து, இன்னும் சொல்லப்போனா அரசியல் ரீதியில இல்லாம காமன் மேனுக்கும் எஜுகேட் பண்ண கட்சி திமுகதான்.

இன்னும் சொல்லப்போனா, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நிர்வாகிகளுக்கு பிஎல்ஏ 2 என்று இந்திய தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியுடைய பிரதிநிதிகளுக்கு ஒரு ஸ்பெஷல் கேம்ப் நடத்தி, ஏன்னா இந்த எக்சசைஸ் செஞ்சாகணும்.

இது வந்து அவங்க வந்து வித்ட்ரா பண்ற வரைக்கும் நாம வந்து பைகாட் பண்ணிருக்க முடியாது. எலக்ஷன நாங்க ஃபேஸ் பண்ணக்கூடிய நேரம் போது.

அப்ப நாங்க அவங்கள எஜுகேட் பண்ணி இருக்கற சிஸ்டத்தை எப்படி பெட்டரா கொண்டு வரணும், எப்படி வந்து மேக்ஸிமம் வாக்காளர்களை வந்து இழக்கக் கூடாது என்பதெல்லாம் வந்து திமுகவினுடைய நிர்வாகிகளுக்கு பயிற்சி கொடுத்த ஒரே கட்சி இந்தியாவுல வந்து திமுக மட்டும்தான்.

எனவே ஜனநாயகத்தின்படி செய்யக்கூடிய எது ஒண்ணுத்துக்கு திமுக துணை நிற்கும்.

We are the prime opposition party in India, I can say this. Thank you.

இவ்வாறு இ.பரந்தாமன் பேட்டியளித்தார்.

ரூ.10 லட்சம் வாங்கிட்டு போஸ்டிங் போடுறது கேவலமா இல்லை? மதுரை

த.வெ.க. எம்.எல்.ஏ. கட்டுக்கட்டா பணம் வாங்குன 100 வீடியோ, ஆடியோ இருக்கு!

கட்சி நிர்வாகிகளின் ஆடியோக்கள் அடுத்தடுத்து ரிலீசாவதால் பரபரப்பு!

மதுரை, அக்.25-

ரூ.10 லட்சம் வாங்கி போஸ்டிங் போடுவதாக மதுரை த.வெ.க. எம்.எல்.ஏ. மதார் பதூருதீன் மீது நேரடியாக குற்றம் சாட்டி, அக் கட்சி பிரமுகர் ஆடியோ வெளியிட்டுள்ளார்.

அடுத்தடுத்து ஆடியோக்கள் வெளியாகி வருவது அக் கட்சியினர் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரை மத்திய தொகுதி தவெக எம்எல்ஏ முஸ்தபா (எ) மதார் பதூருதீன். இவரது உதவியாளர் கனி என்பவர், கட்சி, கவுன்சிலர் பதவிக்கு ரூ.15 லட்சம் வரை பணம் கேட்டு பேரம் பேசும் ஆடியோ வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த ஆடியோவிற்கு பதிலளித்த மதார் பதூருதீனும், எத்தனை ஆயிரம் ஆடியோக்கள் வந்தாலும் அதை சந்திக்க தயார் என கூறியிருந்தார்.

இந்நிலையில், த.வெ.க.வை சேர்ந்த ஜோயல் ஆசிர், எம்.எல்.ஏ. மதார் பதூருதீன் மீது கடுமையாக குற்றம் சாட்டி வெளியிட்டுள்ள ஆடியோ பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மதுரை-ராமநாதபுரம் மண்டல முன்னாள் பேராயரான கிறிஸ்டோபர் ஆசிரின் மகனான ஜோயல் ஆசிர் வெளியிட்டுள்ள ஆடியோவில் கூறியிருப்பதாவது: நான் மதுரையில் இருந்து ஜோயல் பேசுறேன். என்னுடைய கேரக்டர் என்னன்னு உங்களுக்கு தெரியும், என் பணத்தை எவ்வளவோ செலவழிக்க நான் தயார்... அடுத்தவன் பணம் எனக்கு வேணாம். ஆனா இங்க பணம் வாங்கி, பண ஆசை புடிச்சு பண்ணுற அரசியல் தான், இப்ப மதுரையில் நடந்து வருது...

எனக்கு நிறைய போன் வந்து இதற்கு காரணம் நீங்க தான்னு சொல்றாங்க. திருடனுகளுக்கு தான் பயம் இருக்கணும். எவன் பாக்கெட்டில் பணம் போய் சேர்ந்துச்சோ...? நீ பயந்துக்கோ. நாங்க பயப்பட மாட்டோம். பதவிக்கு எவன் கை நீட்டி காசு வாங்குனானோ அவன் அனுபவிக்கட்டும். ஆனால், நல்லவங்க எங்கள போன் பண்ணி தொந்தரவு செய்கிறார்கள். நான் பேசும் இந்த பதிவு உண்மை தான். இன்னும் வேண்டும் என்றால் 100 ஆடியோ பதிவு இருக்கு. வாங்கி தின்ன நாய்களுக்கு அறிவு வேணும். தளபதி விஜய் ஊழலை ஒழிக்கத் தான் வந்திருக்கோம்னு சொல்லியிருக்காரு. அப்ப டிப்பட்ட இடத்துல நின்னுகிட்டு இது தேவையா?

என்கிட்ட, 10 லட்சம் தரணும்.. வாங்கிட்டு தான் போஸ்டிங் போட்டா ருன்னு சொல்றாங்க. இது கேவலமா இல்லையா? இதனால ஒரு பிரச்னை வந்துச்சுன்னா அதுக்கு காரணம் மதுரை மத்திய தொகுதி எம்எல்ஏ முஸ்தபா தான். பாய் அன்னைக்கே டேய் நிப்பாட்டுங்கடா, பணத்தை பத்தி பேசாதீங்கடான்னு சொல்லியிருக்கலாம். ஆனா சொல்லல... அப்ப காரணம் யாரு? எம்எல்ஏ முஸ்தபா தான். இன்னும் என்னை சீண்டி பார்க்காதீங்க. கை நீட்டி காசு வாங்குனா நல்லதையும், கெட்டதையும் அனுபவிங்கடா நாய்களா... எனக்கு போன் வந்ததால் இந்த பதிவு, லட்சம் பேர் கேட்கட்டும் இந்த பதிவை...

பணத்தாசையினால இது எங்க போய் முடிய போகுதுனு பாருங்க... என்கிட்ட பணம் எங்க போயிட்டு வந்துச்சு... கட்டுக்கட்டா வீடியோ அப்படியே பத்தி ரமா வச்சிருக்கேன். வீடியோ ஆதாரத்தோட இருக்கு... தேவைப்பட்டா தலைவர் விஜய் கிட்டயும், பொதுச் செயலாளர் கிட்டயும் கொடுப்பேன், இல்ல மதுரை கமிஷனர் ஆபீஸ்ல கொடுப்பேன். இவ்வாறு பேசியுள்ளார். தற்போது வெளியாகியுள்ள இந்த 2வது ஆடியோ மதுரை தவெக வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே பதவிக்கு பணம் பேரம் பேசிய விவகாரம் தொடர்பாக கட்சி தலைமை என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பு இருந்த நிலையில், தற்போது மதுரை மத்திய தொகுதி எம்எல்ஏ மீதே நேரடியாக குற்றம் சாட்டி, ஆதாரங்கள் இருப்பதாக அதே கட்சியைச் சேர்ந்த நிர்வாகி பேசியிருப்பது மேலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; உளவுத்துறையின் ரகசிய ரிப்போர்ட்டை முதலமைச்சர் படிக்கறதே இல்லைன்னும் அவருடைய வியூக அட்வைசர்களும் 2 முக்கிய அமைச்சர்களும் தான் படிக்கிறதா தலைமைச் செயலக வட்டாரத்தில் பேச்சு அடிபடுதே!

பட்டணம் : ஆமாமய்யா; நான் கூட கேள்விப்பட்டேன். அது உண்மைன்னா உளவுத்துறையின் ரகசிய ரிப்போர்ட்டுக்கு அர்த்தமே இல்லாம போயிடும். இது பாதுகாப்பு விதிகளுக்கும் எதிரானதாச்சே. முதலமைச்சருக்கு இது தெரியாதா? பூனைக்கு யார் மணி கட்டறது?

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(23.10.2026)



1. சாத்தான்குளம் அருகே வீடு புகுந்து வாலிபர் பயங்கர வெறிச்செயல், காதலியின் தாயை சரமாரியாக வெட்டிக்கொன்று, இரண்டு சிறுமிகள் கடத்தல், தந்தை மற்றும் தம்பிக்கும் அரிவாள் வெட்டு....

2. சென்னை செங்குன்றம் அருகே எருமை வெட்டி பாளையத்தில் டாஸ்மாக் கடையில் மது போதையில் ஏற்பட்ட தகராறில், லாரி டிரைவர் ஹெல்மெட்டால் அடித்து கொலை, உடலை மைதானத்தில் குழி தோண்டி புதைத்த கொடூரம் ...

3. சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே குன்னக்குடி சாலையில்



வாலிபர் ஓட ஓட வெட்டிக்கொலை ...

4. தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியில் முன்விரோதம் காரணமாக மீனவர் கத்தியால் குத்தி படுகொலை ....

5. திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே குரிசிலா பட்டு பகுதியில் கள்ளத்தொடர்பு காரணமாக கணவனை கொலை செய்த மனைவி மற்றும் காதலன் சிக்கினர் ...

6. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே பன்னம்பாறையில் நிலப்பிரச்சினை சம்பந்தமாக ஏற்பட்ட தகராறில் விவசாயி கல்லால் அடித்துக் கொலை ...



7. குமரி மாவட்டம் குலசேகரத்தில் கல்லூரி மாணவிகளுக்கு லிப்ட் கொடுப்பது போல் அழைத்துச் சென்று, காரில் பாலியல் தொந்தரவு கொடுத்த த.வெ.க. பிரமுகர் சிக்கினான்...

8. திண்டுக்கல் அருகே நந்தவனப் பட்டியில் 13 வயது சிறுமிக்கு ஆசை வார்த்தை கூறி, கடத்திச் சென்று பாலியல் அத்துமீறலில் ஈடுபட்ட கல்லூரி உதவி பேராசிரியர் சிக்கினான்....

9. சென்னை கொளத்தூரில் 15 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த தாயின் கள்ளக்காதலன் சிக்கினான் ...

10. சென்னை ஓட்டேரியில் பத்தாம் வகுப்பு மாணவியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட வாலிபர் சிக்கினான் ...

11. நெல்லை மாவட்டம் நாங்குநேரி அருகே வேத பாடசாலையில் தங்கி படித்து வந்த சிறுவர்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் சிக்கினான்...



12. சென்னை திருவல்லிக்கேணி எல்லீஸ் சாலையில் ஷேர் செய்து மதுபானம் வாங்குவதில் தகராறு, செல்போன் வியாபாரிக்கு உருட்டு கட்டை அடி ...

13. திருப்பூர் மாநகரில் மளிகை கடைக்காரர் வீட்டு பூட்டை உடைத்து 45 சவரன் நகை மற்றும் 1.5 லட்சம் பணம் கொள்ளை ...

14. சிவகங்கை பேருந்து நிலையம் அருகே விலைவாசி உயர்வால் பாதிக்கப்பட்ட பெண் தனது மகனுடன் சாலையில் உருண்டு கண்ணீருடன் போராட்டம் ...



15. திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே வேப்பன் வலசு கிராமத்தில் விவசாயி வீட்டிற்கு வழக்கமாக ரூ.500 வரும் மின் கட்டணம் , ரூ 49.000/- வந்ததால் அதிர்ச்சி ...

16. தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் கள்ளபிரான் கோயில் அருகே காவலாளி துர்க்கைசாமி என்பவரை அரிவாளால் வெட்டி விட்டு தப்பியோடிய மர்ம நபர்.